**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 28/2021

நாள் : 04.06.2025

பி.வா.சா.1 திரு.உமாமகேஸ்வரி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சொன்ன சங்கதிகளை வைத்துதான் தற்போது தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் தயார் செய்தார். தாவா சொத்தானது ஆதியில் ரமணியின் தகப்பனாருக்கு வழி வந்த சொத்து என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை Para 2ல் "தாவா சொத்து ஆதியில் முனி என்ற ரமணிக்கு பாத்தியப்பட்ட தகப்பனார் வழி சொத்தாகும்" என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6ல் பாரா 2ல் "ராக்கப்பன் சேர்வை அவர்களுக்கு பூர்விக பாத்தியமான சொத்தை" என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராக்கப்பன் என்பவர் முனி என்ற ரமணியின் தகப்பனார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.6ல் 3ம் பக்கத்தில் "மேற்படி சொத்தை நீயும், உன்னுடைய வாரிசுகளும் புத்திர சந்ததி பாரம்பரியமாய் அனுபவித்துக்கொள்ள வேண்டியது" என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ராக்கப்பன் சேர்வைக்கு முனி என்ற ரமணி மட்டும்தான் ஒரே மகன் என்றால் சரிதான். முனி என்ற ரமணிக்கு வாதி மற்றும் பிரதிவாதிகள் தான் வாரிசுகள் என்றால் சரிதான். வேறு வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்து முனி என்ற ரமணிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து என்பதை காட்டுவதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலம் பாரா 5ல் "Some of the documents were misplaced at the time of Defendant side evidence" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவணங்கள் காணாமல் போனதற்கு நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால்

ஆவணங்கள் எதுவும் காணாமல் போகவில்லை, அதனால் புகார் கொடுக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் Para 6 "The plaintiff is not taking any steps to proceed with the will, even after the declaration of the will" என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உயிலை நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தினேனா என்றால் இல்லை.

28.02.2024 ம் தேதி நடந்த எனது குறுக்கு விசாரணையில் பக்கம் 1 பாரா 2ல் "எனது மாமனார் முனி என்ற ரமணிக்கு தகப்பனார் மூலமாக பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்ட விவரம்தான் சரி" என்று கூறியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன்.

உயில் உள்ளது என்ற விவரத்தை நான் Exparte உத்தரவை ரத்து செய்வதற்கு தாக்கல் செய்த மனுவில் கூறியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக தற்போது பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 மற்றும் 12 ஆகிய இரண்டு ஆவணங்களும் கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்த ஆவணங்களுக்கு உரிய சான்றிதழ் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. பி.சா.ஆ.10 புகைப்படத்திற்கு உண்டான சிடியோ Negative–யோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.10 இந்த வழக்கிற்கு தொடர்பு இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

எனது கணவர் இறப்பதற்கு முன்பாகவும், தற்போது வரை கூட்டுப்பட்டாவாகத்தான் உள்ளது என்றால் சரியல்ல. ரமணி பெயரில் தனிப்பட்டாவாகத்தான் உள்ளது. எனது கணவர் பெயரில் உண்மையிலேயே உயில் எழுதப்பட்டிருந்தால், ரமணி இறந்தவுடன் அனைத்து ஆவணங்களும் எனது கணவர் பெயரில் மாற்றம் செய்யப்பட்டிருக்கும் என்றால் எனது கணவர் இறந்தபின்பு வழக்கு தாக்கல் செய்தபின்புதான் அந்த file எங்கள் கையில் கிடைத்தது. எனது கணவர் 2018 ல் இறந்தார். முனி என்ற ரமணி 2011 ம் ஆண்டு இறந்தார். அதற்கு இடைப்பட்ட காலத்தில் உயிலை காட்டி வருவாய்த்துறை

ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் அதற்கான அவசியம் ஏற்படவில்லை. ரமணி உயிருடன் இருந்த காலத்தில் அனைவரும் இருந்து கூட்டுக்குடும்பமாகத்தான் இருந்தோம் என்றால் சரிதான்.

ரமணி என்பவர் எனது கணவர் பெயரில் உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2023 டிசம்பர் மாதத்தில் தெரியவந்தது. அதுவரை அந்த ஆவணம் யாருடைய பொறுப்பில் இருந்தது என்ற விவரம் பற்றி சொல்லவில்லை என்றால் அதுவரை என் மாமனாரின் பீரோவில்தான் இருந்தது. உயிலானது மாமனாரின் பீரோவில் இருந்தது என்ற விவரத்தை எனது எதிர் வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். உயிலில் இரண்டு நபர்கள் சாட்சிக்கையொப்பம் செய்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன்.

நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ. 6, 7, 9, 11 ஆகிய ஆவணங்களை வாதி தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றால் நான் அசல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். அவர்கள் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 மற்றும் எனது நிரூபண வாக்குமூலத்திலும் மற்றும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றில் தாவா சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்பதால், வாதிகளுக்கு தாவா சொத்தில் பாக பங்கு கோரும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. அதனால் ரமணி என்ற முனிக்கு உயில் எழுதிவைக்க எந்தவித அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை

உயில் பற்றி எனக்கு தெரிய வந்த வருடம் 2021 ஆகும். தவறுதலாக 2023 என்று குறுக்கு விசாரணையின் போது சொல்லியுள்ளேன்.

ஒப்பம்/-ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .